மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 117/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சுப்ரமணி | நாள் | 27.07.2023 |
| தகப்பனார் பெயர் | மாணிக்கம் | | |

**1 முதல் 3, 5ம் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

26) என் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் கண்டுள்ள அமைப்புகள் தற்போது நிலையில் இல்லை என்றாலும், அது கற்பனையாக வரையப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல. (கடந்த 30.06.2023ம் தேதியில் மேற்படி மாதிரி வரைபடம் வா.சா.ஆ.14 என தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மாதிரி வரைபடம் இவ்வழக்கில் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது).

27) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13 மாதிரி வரைபடத்திற்கும், தாவாவில் 5-வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால், சரியல்ல. என் பிரமாண பத்திரிக்கையில், இவ்வழக்கின் 5ம் பிரதிவாதி சக்திவேல் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில் மேற்படி வழக்கு எண் எனக்கு தற்போது சரியாக நினைவில்லை.

28) மேற்படி சக்திவேல் தற்போது காளிப்பட்டி பஞ்சாயத்தில் ஏதேனும் அரசியல் பொறுப்பில் உள்ளாரா என்றால், வார்டு மெம்பராக உள்ளார். மேற்படி சக்திவேலின் அரசியல் பதவியை பயன்படுத்தி தாவா சொத்தில் 5ம் பிரதிவாதியின் குடும்ப வழிபாட்டிற்கு உள்ள விநாயகர் கோவிலில் வழிபாடு செய்யவிடாமல் தகராறு செய்ததால்தான் 5ம் பிரதிவாதி மேற்படி சக்திவேலின் மீது வழக்கு போட்டுள்ளார் என்றால், சரியல்ல.

29) 5ம் பிரதிவாதியின் தந்தை தாவா சொத்தில் உள்ள விநாயகர் கோவிலை வழிபாடு செய்வதை யாரும் இடையூறு செய்யக்கூடாது என பொன்னப்பன் வகையறா மற்றும் ஆறுமுகம் வகையறாவின் மீது அ.வ.எண்.122/1983 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் அவருக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றுள்ள நிலையில், நான் மேற்படி 2000ம் வருடத்தில் மேச்சேரி வட்டார வளர்ச்சி அலுவலர் கிணற்று சுற்று சுவர் எழுப்பியதாகவும்,

நவப்ரா திட்டத்தின் மூலம் நீர்குட்டை அமைத்ததாகவும் சொல்வது தவறானது என்றால், சரியல்ல.

30) 5ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு டீ கார்டு மூலம் பாத்தியப்பட்ட தாவா 5–வது அயிட்ட சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் தான் தற்போது இந்த வழக்கை நானும், மற்ற வாதிகளும் சேர்ந்து இவ்வழக்கை நடத்தி வருகிறோம் என்றால், சரியல்ல. எங்கள் முன்னோர்களும் 5ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க முயற்சித்ததால்தான் கடந்த 1983ம் வருடத்திலேயே எங்கள் குடும்பத்திற்கு எதிராக வழக்கு போட்டு தடையுத்தரவு பெற்றுள்ளார்கள் என்றால், சரியல்ல.

31) 5ம் பிரதிவாதி சக்திவேலுக்கு எதிராக தாக்கல் செய்த அ.வ.எண்.161/2016 என்ற வழக்கில் தரப்பினராக இல்லாத நிலையில் மேற்படி வழக்கின் சங்கதிகள் குறித்து நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதை பார்க்கும்போது மேற்படி சக்திவேலுடன் கூட்டு சேர்ந்துதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது தெளிவாகிறது என்றால், சரியல்ல.

32) என் தாத்தாவின் பெயர் ஆறுமுகம். அவர் அ.வ.எண்.122/1983 என்ற வழக்கில் தரப்பினராக இருந்துள்ளார் என்றால், சரிதான். அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி தீர்ப்பிலேயே எங்களுக்கு தடவழியில் நடந்து போவதற்கு மட்டுமே உரிமை உள்ளது என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி அதே பரிகாரத்திற்காக அவரது வாரிசுகளான நாங்கள் தற்போது மீண்டும் அதே பரிகாரத்தை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது முன் தீர்ப்பு தடைகோட்பாட்டால் பாதிக்கப்படுகிறது என்றால், சரியல்ல.

33) மேற்படி அ.வ.எண்.122/1983 என்ற வழக்கில் காலடி தடபாதையில் உரிமை உள்ளதாக மட்டுமே கூறியுள்ள நிலையில் தற்போது இவ்வழக்கில் நான் காலடி தடபாதையுடன் சேர்த்து நடைபாதையும் உள்ளதாக நான் சொல்லியுள்ளது பொய்யானது என்றால், சரியல்ல. மேற்படி காலடி தடம் ச.எண்.99/3ல் கிழபுற ஓரம் தென்வடலாக செல்கிறது என மேற்படி அ.வ.எண்.122/1983 என்ற வழக்கிலும், அதன் மேல்

முறையீட்டு வழக்கு எண்.37/1988 ம் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி நீதிமன்றத்தின் தீர்வுகளுக்கு முரணாக நான் வா.சா.ஆ.13 மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

34) தற்போது இவ்வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் ஏற்கனவே எங்கள் முன்னோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி பரிகாரத்தை நாங்கள் அனுபவித்து வரும் நிலையில் தற்போது பிரதிவாதிகளை தொல்லை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

35) மேற்படி அசல் வழக்கு எண்.122/1983 லும், அதன் மேல்முறையீட்டு வழக்கு எண்.37/1988 லும் என்ன பரிகாரம் வழங்கப்பட்டுள்ளதோ அதை தவிர்த்து வேறு எந்த பரிகாரமும் கோர இயலாது என்றாலும், எனவே இவ்வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.